# சாந்தி முகூர்த்தம்

## நேரம் குறியுங்கள்



மனித வாழ்வின் துவக்கம் முதல் மரணம் வரை 40 நிலைகளை இந்து மதம் விளக்குகிறது. இதில் முதல் நிலை கரு உருவாகும் நாள். மேலும் ஒரு பெண் தனது கருவை கடவுளுக்கு தானம் செய்வதாம் இதை 'கர்ப்ப தானம்' என்றும் அழைப்பார்கள்.

ஒரு ஆணும், பெண்ணும் இணைந்து ஒரு கரு உருவாக்கும் அடுத்த தலைமுறையின் வித்து. படைக்கும் தொழிலை செய்யும் பிரம்மா போன்றவர்கள் தான் புது தம்பதியினர்.

இப்பிரபஞ்சத்தின் வரலாற்றையே மாற்றப் போகும் அந்த கரு உருவாகும் நேரம் மிகவும் நல்லதான நேரமாக இருத்தல் அவசியம்.

அவசரமான, தவிர்க்க முடியாத சூழ்நிலையில் திருமண முகூர்த்தம் நேரம் சரியில்லாத நிலையிலும் கர்ப்பதான சாந்தி முகூர்த்தம் மிக நல்ல நேரமாக அமைதல் அவசியம்.

நமது முன்னோர்கள் இது விஷயமாக நிறைய இலக்கணங்களை வகுத்துள்ளார்கள். அப்படி இருவரது நட்சத்திரத்தின் அடிப்படையில் சாந்தி முகூர்த்தம் நடத்திடல் நன்று. முற்றிலும் 100% மிக நல்ல நேரம் அமைதல் இயலாது. ஆயினும் கூடுமானவரை சிறந்த நேரம் தேர்வு செய்ய சில முக்கியமான விஷயங்களை மட்டும் பார்ப்போம்.

திருமண நாள் அல்லது மறுநாள் நாளில் நடத்தலாம்.

- மணப்பெண், மணமகனின் ஜென்ம நட்சத்திரத்தில் ஜென்ம ராசியில் செய்யக் கூடாது. சந்திராஷ்டம தினம் அறவே கூடாது.
- ஞாயிறு, சனி, செவ்வாய் முற்றிலும் தவிர்க்கவும்.
- ரோகிணி, உத்திரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், உத்திராடம், மூலம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்கள் மிகவும் சிறந்தது.
- அஸ்வினி, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரங்கள் சுமாரானவை.
- வளர்பிறை துவிதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரியோதசி திதிகள். தேய்பிறை துவிதியை, திருதியை பஞ்சமி, சப்தமி திதிகள் நன்று.
- மேஷம், கடகம், துலாம், மகர லக்னம் மிக சிறந்தவைகள்.
- லக்னம், 7, 8-ம் இடம் அவசியம் சுத்தமாக இருத்தல் வேண்டும்.
- மாதவிலக்கு ஆன 7-ம் நாள் மேல் செய்தல் நன்று.

சந்திர உதயத்தின் பின்னர் சாந்தி முகூர்த்த நேரத்திற்கு 3 மணி நேரம் முன்பு தம்பதியினர் பன்னீர் கலந்த நீரால் குளித்து புது ஆடை அணிந்து, அவரவர் சம்பிரதாயப்படி நெற்றியில் விபூதி, திருமண், சந்தனம் தரித்து சாத்வீக ஆகாரத்தை உட்கொண்ட பின்னர் படுக்கை அறைக்கு செல்லுமுன் குழந்தை பேறு பெற்ற சுமங்கலிகள் 5 அல்லது 9 பேருக்கு இயன்ற தானம் செய்து பெரியவர்கள் காலில் விழுந்து வணங்கி பின் தெய்வத்தை வணங்கி சம்பிரதாயப்படி வசந்த அறையில் பிரவேசிக்க வேண்டும்.

## திருமண முகூர்த்தம் நேரம் சரியில்லாத நிலையிலும், சாந்தி முகூர்த்தம் நல்ல நேரமாக அமைத்தல் மிக அவசியம்

வசந்த அறையில் நுழைந்த பின்னர் நல்ல முகூர்த்த லக்னம் காலம் வரை அமைதியாக நல்ல குழந்தை வேண்டி இறைவனை பிரார்த்தனை செய்யவும். இந்த காலம் தம்பதிகளுக்கு 'கர்ப்ப தானம்' நன்று.

வசந்த அறையில் முதல் நாள் காமாட்சி தீபம் ஏற்றி விடியும் வரை அணையாமல் பார்க்கவும்.

அதிகாலையில் குளித்து புது ஆடை அணிந்து தாய், தந்தைக்கு பாத பூஜை செய்து பின் தெய்வ வழிபாடு செய்யவும்.




கே.வி.பிரவண சர்மா

எண்:9, 4-வது தெரு, கல்யாண் நகர், சென்னை-45.